பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
11 07 2025 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நக்ஸல் தீவிரவாதத்தை முழுவதுமாக முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
- அஞ்சல் நிலையங்களை நவீனமயமாக்கி மக்கள் நலனுக்கான சேவைகளை பெருமளவில் வழங்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
- ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க ‘ஞாயிறுதோறும் சைக்கிள் பயிற்சி’ நிகழ்வுகளில் மக்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.
- உலக அளவில் அதிவேக டிஜிட்டல் பணப்பரிமாற்ற முறையை இந்தியா கொண்டுள்ளதாக சர்வதேச செலாவணி நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது.
- உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் ஜோதி சுரேகா வெண்ணம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நக்ஸல் தீவிரவாதத்தை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முழுவதுமாக முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

ராஞ்சியில் நேற்று நடைபெற்ற கிழக்கு மண்டல கவுன்சில் கூட்டத்தில் பேசிய அவர், கிழக்குப் பகுதி மாநிலங்களின் மேம்பாட்டுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகக் கூறினார்.

இந்தக் கவுன்சில் கூட்டத்தில் இதுவரை விவாதிக்கப்பட்டவற்றில் 83 சதவீத பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

நக்சல் தீவிரவாதத்தை ஒடுக்குவதில் மாநிலங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு அவசியம் என்று அவர் கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட முயற்சியின் காரணமாக கடந்த 11 ஆண்டுகளில் நக்சல் தீவிரவாத நடவடிக்கைகள் பெரிய அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

பருத்தி விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பது குறித்து, தமிழகத்தின் கோவையில் இன்று நடைபெறும் தேசிய அளவிலான ஆலோசனைக் கூட்டத்தில் மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் பங்கேற்கிறார்.

பருத்தி சாகுபடியில் நிலவும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து விவசாய அமைப்புகள், விதை உற்பத்தி நிறுவனங்கள், பஞ்சாலை தொழில்துறையினர் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.

இதேபோல் கயிறு உற்பத்தியை அதிகரிப்பது குறித்த ஆலோசனைக் கூட்டமும் பொள்ளாச்சியில் மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை இணையமைச்சர் செல்வி ஷோபா கரந்தலாஜே தலைமையில் நடைபெற உள்ளது.

<<<<>>>>

அஞ்சல் நிலையங்களை நவீனமயமாக்கி மக்கள் நலனுக்கான சேவைகளை பெருமளவில் வழங்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற கிராமப்புற அஞ்சல் சேவைகள் தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், உலகிலேயே மிகப்பெரிய வினியோக கட்டமைப்பாக இந்திய அஞ்சல்துறை உள்ளதாக அவர் கூறினார்.

நாடு முழுவதும் ஒரு லட்சத்து 64 ஆயிரம் அஞ்சல் நிலையங்கள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவை ஒரு துறையாக மட்டுமல்லாமல் குடும்பமாக செயல்பட்டு மக்களுக்கான சேவைகளை வழங்கி வருவதாக அவர் கூறினார்.

கிராமப்புறங்களில் அஞ்சல்துறை கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவதன் மூலம் மக்களுக்கான சேவைகளை திறம்பட வழங்க அரசு உறுதிபூண்டுள்ளதாக திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

<<<<>>>>

ஆரோக்கியமான இந்தியாவை உருவாக்க 'ஞாயிறுதோறும் சைக்கிள் பயிற்சி' நிகழ்வுகளில் மக்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாடு முழுவதும் இதுவரை 11 ஆயிரம் இடங்களில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவற்றில் பல்வேறு தரப்பைச் சேர்ந்த 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உடல் பருமன் இல்லாத இந்தியாவை உருவாக்க அனைவரும் இந்த இயக்கத்தில் பங்கேற்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆரோக்கியமான, வலுவான, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று திரு. மன்சுக் மாண்டவியா கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அதிவேக டிஜிட்டல் பணப்பரிமாற்ற முறையை இந்தியா கொண்டுள்ளதாக சர்வதேச செலாவணி நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது.

டிஜிட்டல் பணப்பரிமாற்றம் தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில், இந்தியாவில் யு.பி.ஐ. பணப் பரிமாற்ற முறை மிகப்பெரிய வளர்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மிகச் சிறிய அளவிலான தொகை முதல் பெரிய அளவிலான தொகை வரை உடனடியாக பரிமாற்றம் செய்ய முடிவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

இதனால் இந்தியாவில் சிறிய கிராமங்களில் கூட இந்த பணப் பரிமாற்ற முறை மக்களிடையே அதிக அளவில் பயன்படுத்தப்படுவதாகவும், நாட்டில் வங்கி சேவைகளும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளது.

<<<<>>>>

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற எரிசக்தி சேமிப்பு வார மாநாட்டில் பேசிய அவர், நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் தற்போது 277 ஜிகாவாட்டாக உள்ளது என்றார்.

கடந்த 10 ஆண்டுகளில் சூரிய சக்தி தகடுகளின் உற்பத்தி நாட்டில் 38 மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பேட்டரி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

குறைந்த விலையில் மருந்துகளை வழங்கும் நோக்கில் மத்திய அரசு பிரதமரின் மக்கள் மருந்தக திட்டத்தை செயல்படுத்தி வருகிறது

இத்திட்டம் தமிழகத்தின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது

இதன் மூலம் பலர் பயனடைவதாக இந்த மருந்தகத்தை நிர்வகிக்கும் கௌரி தெரிவித்தார்.

இது தங்களுக்கு பெரிதும் பயனளிப்பதாக உள்ளதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

மத்திய அரசு மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக மின்சார வாகன உற்பத்தியும், அதன் பயன்பாடும் அதிகரித்துள்ளதாக மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

புதுதில்லியில் தேசிய எரிசக்தி சேமிப்பு வார மாநாட்டில் பேசிய அவர், மின்சார வாகனங்களை ஊக்குவிக்க வரிச்சலுகைகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் மேம்பாட்டில் பசுமைப் போக்குவரத்து முக்கியப் பங்காற்றுவதாக அவர் கூறினார்.

உலகளாவிய பசுமைப் போக்குவரத்து மையமாக இந்தியாவை மாற்ற மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

<<<<>>>>

உத்தரப் பிரதேச மாநிலத்தில் கன்வார் யாத்திரை இன்று தொடங்குகிறது. இனையொட்டி உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட் மற்றும் தில்லி அரசுகள் விரிவான ஏற்பாடுளைச் செய்துள்ளன.

இந்த யாத்திரையில் லட்சக்கணக்கான பக்தர்கள் ஹரித்வார், கௌமுக், கங்கோத்ரி போன்ற புனித தலங்களுக்குச் சென்று கங்கையில் நீராடவுள்ளனர்.

யாத்திரை நடைபெறும் கன்வார் வழித்தடத்தில் ஆயிரத்து 845 நீர் சேவை மையங்கள், 829 மருத்துவ முகாம்கள் மற்றும் ஆயிரத்து 222 காவல் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக உத்தரப் பிரதேச அரசு கூறியுள்ளது.

<<<<>>>>

அசாமில், மனித - யானை மோதலைத் தடுக்க கஜ மித்ரா என்ற திட்டத்தை எட்டு மாவட்டங்களில் செயல்படுத்த அந்த மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

யானைகளால் அதிக அளவில் பிரச்சினை ஏற்படும் 80 கிராமங்களில் தலா எட்டு உறுப்பினர்களைக் கொண்ட விரைவு நடவடிக்கை குழுக்கள் உருவாக்கப்படும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

இத்திட்டம் யானைகளின் பாதுகாப்பையும் மக்களின் வாழ்வாதார பாதுகாப்பையும் உறுதி செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் ஜோதி சுரேகா வெண்ணம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மேட்ரிடில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 147-144 என்ற புள்ளிக் கணக்கில் துருக்கியின் **Hazal Barun**-ஐ வென்றார்.

இப்போட்டியில் **Parneet Kaur**-ம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>

இந்திய ஓபன் பாரா தடகள சாம்பியன் போட்டி பெங்களூருவில் இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

<<<<>>>>

உலகக் கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் கொனேரு ஹம்பி, ஹரிகா துரோனவள்ளி, வைஷாலி மற்றும் திவ்யா இரண்டாவது சுற்றில் வெற்றி பெற்றனர்.

<<<<>>>>

லண்டனில் நடைபெற்று வரும் இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான நேற்று ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 251 ரன் எடுத்துள்ளது.

<<<<>>>>

ஆஸ்திரேலியா-ஏ அணிக்கு எதிரான மகளிர் கிரிக்கெட் தொடரில் பங்கேற்பதற்கான இந்தியா-ஏ அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ராதா யாதவ் தலைமையிலான இந்த அணியில் 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

3 ட்வெண்ட்டி ட்வெண்ட்டி மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் இந்த அணி பங்கேற்கும் ஆட்டங்கள், ஆகஸ்ட் 7ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை ஆஸ்திரேலியாவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

2027ஆம் ஆண்டு உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டிகள் புதுதில்லியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>